# என்னை நேசிக்கின்றாயா?

*நீ என்னை நேசிக்கிறாயா? நீ என்னை நேசிக்கிறாயா? என்று உன்னிடம் யாரேனும் மீண்டும் மீண்டும் கேட்டதுண்டா? நீ பதில் சொன்ன பிறகும் மீண்டும் இதே கேள்வியைக் கேட்டால் எப்படியிருக்கும்? 'ஆம், என்ற பிறகும் மீண்டும் கேட்கிறார்களே?' என்று நீ நினைத்திருக்கலாம் அல்லவா? இதே கேள்வியைப் பேதுருவிடம் இயேசு மூன்று முறை கேட்டார்.*

இயேசு தங்களுடன் இல்லாதிருந்தது பேதுருவுக்கு வேதனையாக இருந்தது. மீன் பிடிக்கச் சென்றாலாவது நேரம் கழி யும் என்று நினைத்தார் போலும். எனவே ஒருநாள், மற்ற சீடர்களிடம், ''நான் மீன்பிடிக்கப் போகிறேன்'' என்றார். உடனே அவர்கள் ''நாங்களும் வருகிறோம்'' என்று கூறிப் பேதுருவுடன் மீன்பிடிக்கச் சென்றனர். இரவு முழுவதும் வலை வீசியும் ஒரு மீன்கூட வலையில் விழாதது சீடர்களுக்கு ஏமாற்றமாய் இருந்தது. எனவே, அதிகாலையிலேயே கரையை நோக்கிச் சோர்வுடன்திரும்பிவந்து கொண்டிருந்தனர். இரவு முழுவதும் வீணாகக் கழிந்துவிட்டது என்று பேதுரு வேதனைப்பட்டிருக்கலாம்.



பேதுரு, தாம் இயேசுவை மறுதலித்ததற்காகப் பின்னர் மிகவும் வேதனை அடைந்தார். தேவனிடம் பேதுரு மன்னிப்புக் கேட்டிருந்தார். இயேசுவும் பேதுருவை மன்னித்து விட்டார். ஆனால், பேதுருவின் மனமாற்றத்தை மற்றச் சீடர்களும் அறிந்து கொள்ளவே பேதுருவிடம் இயேசு மூன்றுமுறை, ''நீ என்னை நேசிக்கிறாயா?'' என்று கேட்டார். ஏனென்றால், பேதுருவின் உண்மையான மனமாற்றம் இயேசுவுக்கு மட்டுமே தெரியும்.

எந்த ஒரு மீனும் இல்லாமல் வெறுமையான வலையுடன் படகில் கரையை நோக்கி அவர்கள் வந்து கொண்டிருந்தனர். அவர்களது படகு கரையைச் சற்று நெருங்கிக் கொண்டிருந்தபோது, கடற்கரையிலே ஒரு மனிதர் நிற்பதைச்

## மனன வசனம்

**இரண்டாந்தரம் அவர் அவனை நோக்கி: ... நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார்.... என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார். யோவான் 21:16.**

சீடர்கள் கவனித்தனர். அந்த மனிதர்அவர்களைப் பார்த்து, ''மீன் பிடித்திருக்கிறீர்களா?'' என்று கேட்டார்.

''ஒரு மீன்கூட கிடைக்க வில்லை'' என்றனர் சீடர்கள். அப்போது அந்த மனிதர் மறுபடியும், ''உங்கள் படகிற்கு வலப் புறமாக வலையை வீசுங்கள், அப்போது மீன் கிடைக்கும்'' என்றார்.

அவ்வாறே படகின் வலது பக்கமாக ஆழம்நிறைந்த பகுதியில் சீடர்கள் வலையை வீசினார்கள். சற்றுப் பொறுத்து வலையை இழுத்தபோது வலையில் மீன்கள் நிறைந்திருந்தன. யாவரும் சேர்ந்துவலையைமெல்லஇழுத்து மீன்களைப் படகுகளில் போட்டார்கள். இதுவரையிலும் அவர்கள் தங்கள் வாழ்வில் பிடித்திராத அளவு, படகே மூழ்கிவிடும் அளவு மீன்கள் இருந்தன.

ஆச்சரியம் பொங்க கடற்கரையில் தங்களிடம் பேசிய மனிதரைப் பார்க்கத் திரும்பினார் யோவான். சட்டென்று அவருக்கு ஓர் உண்மை புரிந்தது. உடனடியாக பேதுருவிடம், ''பேதுரு, அவர் கர்த்தர்'' என்று சத்தமாய், சந்தோஷமாய்க் கூவினார்.

இயேசுவை மீண்டும் பார்த்ததால் பேதுருக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. இயேசுவும் தமது அன்பான சீடர்களைப் பார்ப்பதற்காகக் காத்துக்கொண்டிருந்தார். வேகமாகப் படகைக் கரையை நோக்கிச் செலுத்தினார்கள். பேதுருவுக்கோ, இயேசுவை வெகுசீக்கிரமாகப் பார்க்க வேண்டும்போல இருந்தது. எனவே, கடலுக்குள் குதித்து வேகமாக இயேசுவைப் பார்க்க நீந்தினார்.

உணவிற்குப் பின், பேதுருவிடம் இயேசு ''பேதுருவே, இவைகளிலும் நீ என்னை அதிகமாக நேசிக்கிறாயா?'' என்று கேட்டார்.

''ஆம்! ஆண்டவரே நான் உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர்அறிவீர்''என்றார். மறுபடியும் இதே கேள்வியை பேதுருவிடம் கேட்டார். பேதுருவும் அதே பதிலை மீண்டும் சொன்னார்.



## செய்தி

**பிறரிடம் நாம் அக்கறைகாட்டும்போது தேவனுக்கு நாம் சேவை செய்கிறோம்.**

பேதுருவின் கண்கள் கலங்கின. “ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர்; நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர்” என்றார். இயேசுவும், “என் ஆடுகளை மேய்ப்பாயாக” என்றார்.

மற்ற சீடர்களின் முன்பாக இயேசு மூன்று முறை இவ்வாறு பேதுருவிடம் கேட்டார். பேதுருவை இயேசு மன்னித்ததையும், மீண்டும் தமக்காகப் பொறுப்புள்ள வேலைசெய்ய அவரை அழைத்ததையும் மற்ற சீடர்கள் அறிந்துகொள்ளவே இயேசு அவ்வாறு கேட்டார்.

நீயும் தேவனுக்கென்று மற்றவர்களிடம் அன்புகாட்டுவாயா? இயேசு உனக்கு நிச்சயமாக உதவிசெய்வார்.

### செய்முறை

*கீழே கொடுக்கப்பட்டிருக்கும் படங்களைப் பார். இவ்வாரப் பாடத்தைப் படித்து அதற்கேற்றாற் போன்று படங்களை வரிசைப்படுத்தி வட்டத்திற்குள் சரியான எண்களை எழுதுக.*









